தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12-11-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## 55 ஆவது இந்தியநுண்ணுயிரியல் வல்லுநர்கள் சங்க ஆண்டுக் கருத்தரங்கு

55வது வருடாந்திர இந்திய நுண்ணுயிரியல் வல்லுநர்கள் சங்க கருத்தரங்கின் துவக்க விழா இன்று கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2014, நவம்பர் 12 நடைபெற்றது.

தற்போது நுண்ணுயிர்களை அடிப்படையாகக் கொண்டுதான் மருத்துவம், உணவு, இரசாயனம் மற்றும் விவசாய தொழிற்சாலைகள் போன்றவை பெரும்பாலாக செயல்பட்டு வருகின்றன. இத்தகைய நுண்ணுயிரிகள் சார்ந்த பொறியியல் நுட்பங்களைக் கொண்டு உயிர் சார்ந்த பொருட்கள் எதிர்காலத்தில் இயற்கையாகவும், பொருளாதாரத்தைச் சார்ந்தும் உற்பத்தி செய்யப்படும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் மு. இராமசாமி அவர்கள் தலைமயுரையில் கூறியதாவது, வேளாண் நுண்ணுயிரியல் துறை, சுற்றுப்புறச்சூழல் நுண்ணுயிரியல் துறை, உணவு, தொழில் நுண்ணுயிரியல் துறை, மருத்துவ நுண்ணுயிரியல் துறை, நோய் எதிப்பத்திறன் காரணிகள், நுண்ணுயிர் பெருக்கம் மற்றும் உயிர்வழிமுறை செயல்படுத்துதல் வீரியம் பற்றி கூறினார்.

இந்த அறிவியல் கருத்தரங்கில் காகித பயன்பாடு மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, ஆராய்ச்சிச் சுருக்கமானது குறுந்தகடு வாயிலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. குறு ஆராய்ச்சிக் கட்டுரைகளானது அறிவியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் பங்கேற்பாளர்களுக்கு கையேடுகளாக வழங்கப்பட்டது. நுண் அறிவியல் துறை சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இளம் திறனாளிகளை ஊக்குவிக்கும் வகையில் வளர்ந்துவரும் ஆராய்ச்சியாளர்களுக்கான தனிப்பிரிவு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கலந்தாய்வு கூட்டமானது இந்தியாவிலுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட அறிவியல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் கொண்டு நிகழ்த்தப்படுகின்றது. இந்தக் கருத்தரங்கானது அறிவியல் சார்ந்த நுண்ணுயிரியல் ஆய்வாளர்களுக்கு பகுத்தறிவிற்குரிய மாற்றங்களை நுண்ணுயிரிகள் கொண்டு சிறந்த முறையில் செயலாற்ற முடியும்.

முன்னதாக முனைவர் கே. குமார், பேராசிரியர் மற்றும் கருத்தரங்கின் செயலர் வரவேற்புரையாற்றினார். முனைவர் ஜி. கோபால்சாமி, இணை பதிவாளர் அவர்கள் நன்யுரை நல்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்